


04.11. 2024

தலைப்புச் செய்திகள்

- ஏழை எளிய மக்கள் அனைவருக்கும் வீடுகள் வழங்குவதே பி.ஜே.பி அரசின் முதன்மையான நோக்கம் என்று கட்சியின் மூத்த தலைவரும் பிரதமருமான திரு. நரேந்திரமோடி ஜார்கண்ட் தேர்தல் பிரச்சார கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.
- புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திறன் கொண்ட 50 சூரியசக்தி பூங்காக்களுக்கு மத்தியஅரசு ஒப்புதல் வழங்கியிருப்பதாக, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.
- தமிழ்நாட்டு இளைஞர்கள் கல்வியில் சிறந்தோங்க பல்வேறு திட்டங்களை மாநில அரசு முனைப்புடன் மேற்கொண்டுள்ளதாக முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.
- கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, உள்ளிட்ட 10 மாவட்டங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.
- 14-வது தேசிய சீனியர் ஆடவர் ஹாக்கி சாம்பியன்பட்ட போட்டிகள் சென்னையில் இன்று தொடங்குகின்றன.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖

பிரதமர்

ஜார்கண்ட் மாநிலத்தில் பி.ஜே.பி. வெற்றிபெற்றால் இளையோருக்கு மாதந்தோறும் 2 ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படும் என்று பி.ஜே.பி. மூத்த தலைவரும் பிரதமருமான திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

ஜார்கண்ட் மாநிலம் கர்ஹ்வாவில் இன்று பிரச்சார கூட்டத்தில் உரையாற்றிய அவர், ஏழை எளிய மக்கள் அனைவருக்கும் வீடுகள் வழங்குவதே பி.ஜே.பி அரசின் முதன்மையான நோக்கம் என்று பிரதமர் கூறினார்.

பி.ஜே.பி. அரசு ஆட்சிக்கு வந்தால் ஜார்கண்ட் வளர்ச்சியடையும் என்று உறுதியளித்த அவர், வளர்ச்சியடைந்த பாரத இலக்கை நோக்கிய சுதந்திர நூற்றாண்டு பாதையில் நாடு தற்போது பயணிக்கும் இத்தருணத்தில் நடைபெறும் இத்தேர்தலில் மக்கள் பி.ஜே.பிக்கு வாக்களிக்க வேண்டும் என்றார்.

தொடர்ந்து சாய்பாசா பகுதியில் பிஜேபி. மற்றும் கூட்டணி கட்சி வேட்பாளர்களை ஆதரித்து பிரதமர் வாக்குகளை திரட்டுகிறார்.

வரும் 13 மற்றும் 20-ம் தேதிகளில், 2 கட்டங்களாக ஜார்கண்ட் மாநிலத்தில் சட்டப்பேரவைக்கான வாக்குப்பதிவு நடைபெறுகிறது

இதனிடையே மகராஷ்டிர மாநிலத்தின் 288 சட்டப்பேரவை தொகுதிகளில் வரும் 20-ம் தேதி ஒரேகட்டமாக நடைபெறவுள்ள தேர்தலுக்கான வேட்பு மனுக்களை திரும்ப பெற இன்றுடன் கால அவகாசம் நிறைவடைகிறது.

❖❖❖❖❖❖❖❖

ஜக்தீப் தன்கர்

தேசியவாத மதிப்பீடுகளுக்கு பொதுநிர்வாகத்தில் உள்ள மக்கள் உயர் முன்னுரிமையுடன் செயலாற்றுவதன் அவசியத்தை குடியரசு துணைத்தலைவர் திரு. ஜக்தீப் தன்கர் வலியுறுத்தி உள்ளார்

புதுதில்லியில் இந்திய பொதுநிர்வாக நிறுவனத்தின் 70-வது வருடாந்திர நிகழ்ச்சியில் இன்று தலைமையுரையாற்றிய அவர், வளர்ச்சியடைந்த ஒருங்கிணைந்த இந்தியா மூலம் குடிமக்களுக்கு அச்சமின்றி சேவையாற்றுவதன் அவசியத்தை எடுத்துரைத்தார்.

சமூக தேவைகளுக்கான அடிப்படை திட்டங்கள் உறுதியுடன் மேற்கொள்ளப்பட வேண்டும் என அவர் குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖❖

ஜெய்சங்கர்

ஆஸ்திரேலிய நாட்டின் Queensland மாகாணத்தின் பிரிஸ்பேன் நகரில் வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் இந்தியாவின் புதிய தூதரகத்தை இன்று துவக்கி வைத்தார்.

இந்தியா ஆஸ்திரேலியா இடையே நட்புறவை இத்தூதரகம் மேலும் வலுப்படுத்துவதோடு, வர்த்தகம், கல்வி இணைப்பு திட்டங்களை முன்னெடுத்துச் செல்லும் என்று அவர் கூறியுள்ளார்.

இரு நாடுகளுக்கு இடையிலான இருதரப்பு நட்புறவு தொடர்ந்து அதிகரித்து வருவது குறித்து மகிழ்ச்சி தெரிவித்தார்.

பிரதமர் திரு. நரேந்திரமோடி சென்ற ஆண்டு ஆஸ்திரேலியா வாழ் இந்திய சமூகத்தினருக்கு அளித்த உறுதிமொழிக்கு ஏற்ப இத்தூதரகம் ஏற்படுத்தப் பட்டிருப்பதாக டாக்டர் ஜெய்சங்கர் குறிப்பிட்டார்.

குயின்ட்ஸ்லாண்ட் ஆளுநர் டாக்டர் ஜெனட்யங்கையும் சந்தித்து திரு. ஜெய்சங்கர் பேசினார்.

❖❖❖❖❖❖❖❖

சோலார் கூட்டமைப்பு

நாட்டில் இன்னும் 6 ஆண்டுகளில், 500 ஜிகாவாட் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திறன் இலக்கை எட்டுவதன் ஒருபகுதியாக, தற்போது 90 ஜிகாவாட் சூரிய மின்சக்தி திறனை இந்தியா எட்டியிருப்பதாக புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் சர்வதேச சூரிய மின்சக்தி கூட்டமைப்பின் 7-வது அமர்வு கூட்டத்தில் இன்று துவக்கவுரையாற்றிய அவர், 37.5 ஜிகாவாட் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திறன் கொண்ட, 50 சூரியசக்தி பூங்காக்களுக்கு மத்தியஅரசு ஒப்புதல் வழங்கியிருப்பதாக குறிப்பிட்டார்.

சர்வதேச சூரியசக்தி பிரிவின் மின் உற்பத்தி திறன் 2 டெராவாட் ஆக அதிகரிக்கும் என்று அவர் எடுத்துரைத்தார்.

சூரியசக்தி கூட்டமைப்பு அமர்வு இந்திய தலைமை மற்றும் பிரான்ஸின் இணை தலைமையில் நடைபெறுவதாக அவர் குறிப்பிட்டார்.

சூரிய கூட்டமைப்பு உறுப்பு நாடுகளில், சூரிய சக்தி உற்பத்தியை அதிகரிப்பதற்கான அனைத்து அம்சங்கள் குறித்து இந்த கூட்டத்தில் விவாதிக்கப்படும் என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

குறைந்த எரிசக்தி வள ஆதாரங்கள் கொண்ட பிராந்தியத்தில் சூரியசக்தி மூலம் மின்உற்பத்தியை அதிகரிப்பதற்கான வழிமுறைகள் குறித்து இதில் ஆராயப்படும் என திரு. பிரல்ஹாத் ஜோஷி எடுத்துரைத்தார்

❖❖❖❖❖❖❖❖

அமெரிக்க அதிபர் தேர்தல்

அமெரிக்காவின் 47-வது அதிபர் தேர்தல் நாளை நடைபெறுவதை ஒட்டி அனைத்து ஏற்பாடுகளும் அங்கு தயார்நிலையில் உள்ளன.

குடியரசு கட்சி சார்பில் திரு.டொனால்டு ட்ரம்பும்.

ஜனநாயக கட்சி சார்பில் திருமதி கமலா ஹாரீஸும் களத்தில் உள்ளனர்.

❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

தமிழக இளைஞர்களை கல்வியில் சிறந்தவர்களாக உருவாக்க பல்வேறு திட்டங்களை அரசு நிறைவேற்றி வருவதாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னை கொளத்தூரில் 2 கோடியே 85 லட்ச ரூபாய் மதிப்பில் கட்டப்பட்ட பணியிட மையம் மற்றும் மாணாக்கருக்கான கல்வி மையத்தை இன்று திறந்துவைத்து பேசிய அவர் தொழில்துறையில் தமிழ்நாடு முன்னிலையில் உள்ளதாக குறிப்பிட்டார்.

வாய்ஸ்

சென்னையில் அண்மையில் பெய்த மழையின்போது தமிழக அரசு போர்கால அடிப்படையில் நடவடிக்கைகளை மேற்கொண்டாக கூறினார்.

அரசின் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளால் வெள்ளநீர் முழுமையாக வடிந்ததாக குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சியில் 107 பேருக்கு விலையில்லா மடிகணினிகளையும், 350 மகளிருக்கு விலையில்லா தையல் இயந்திரங்களையும்,

2 ஆயிரத்து 493 பேருக்கு விலையில்லா கண்ணாடிகளையும் முதலமைச்சர் வழங்கினார்.

கொளத்தூரில் 77 மின்மாற்றிகளுக்கு வியூ கட்டர் அமைக்கும் பணிகளையும் முதலமைச்சர் தொடங்கிவைத்தார்.

❖❖❖❖❖❖❖❖

போதை தடுப்பு குழுக்கள்

நெல்லை, தூத்துக்குடி, கன்னியாகுமரி தென்காசி மாவட்டங்களை உள்ளடக்கிய நெல்லை காவல் சரகத்திற்கு உட்பட்ட பகுதிகளில் 256 கல்லூரிகளில் போதை தடுப்பு குழுக்கள் அமைக்கப் பட்டுள்ளதாக நெல்லை சரக காவல்துறை துணைத்தலைவர் திரு.மூர்த்தி தெரிவித்துள்ளார்.

நெல்லை வண்ணாரப்பேட்டை தனியார் பொறியியல் கல்லூரியில் இன்று போதை தடுப்பு பயிற்சி நிகழ்ச்சியில் உரையாற்றியஅவர், இதன் ஒரு தடுப்பு குழுவில் 20 மாணவர்கள், 5 பேராசிரியர்கள் இடம்பெற்றுள்ளதாக கூறினார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

வானதி

கோவை காந்திபுரத்தில் மெட்ரோ ரயில் திட்டம் குறித்து மத்திய அரசு கோரும் தகவல்களை மாநில அரசு உடனடியாக விரைந்து அனுப்ப தாம் முதலமைச்சரிடம் கோரிக்கை விடுக்க இருப்பதாக பிஜேபி தேசிய மகளிர் அணித்தலைவர் திருமதி வானதி ஸ்ரீனிவாசன் தெரிவித்துள்ளார்.

கோவை காந்திபுரத்தில் புதிய பேருந்து நிழற்குடையை அவர் இன்று திறந்துவைத்தார்.

❖❖❖❖❖❖❖❖

தர்கா

திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டை தர்காவின் 723-ம் ஆண்டு பெரிய கந்தூரி விழா கொடியேற்றத்துடன் நேற்றிரவு தொடங்கியது.

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

கோவில்

நாகை மாவட்டம் அருள்மிகு சிக்கல் சிங்கார வேலர் ஆலய கந்தசஷ்டி விழாவின் 2-ம் நாள் பெருவிழாவை முன்னிட்டு சிங்கார வேலர் வீதிஉலா நேற்று வெகுவிமரிசையாக நடைபெற்றது.

முக்கிய நிகழ்ச்சியான முருகப்பெருமான் வேல் வாங்கும் நிகழ்வு வரும் 6-ம் தேதி நடைபெறுகிறது.

இதனைத் தொடர்ந்து சூரசம்ஹாரம் மற்றும் வள்ளி தெய்வானை திருக்கல்யாண உற்சவமும் இடம் பெறுகிறது.

❖❖❖❖❖❖❖❖

இருவரி

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் முப்படை ஓய்வூதியதாரர்களுக்கான குறைதீர் முகாம் நாளைமறுநாள் புதிய பேருந்து நிலையம் அருகே நடைபெறவுள்ளதாக ஆட்சித்தலைவர் திருமதி. சரயு தெரிவித்துள்ளார்.

நாகை - இலங்கை இடையிலான கப்பல் போக்குவரத்து நீட்டிப்பு செய்யப்பட்டு இனி வாரத்திற்கு 5 நாட்கள் இயக்கப்படவுள்ளதாக கப்பல் போக்குவரத்து நிர்வாகம் அறிவித்துள்ளது.

நாமக்கல் மாவட்டத்தை சேர்ந்த மீனவ பட்டதாரி இளைஞர்கள், இந்திய குடிமைப்பணி போட்டித்தேர்விற்கு பயிற்சிபெற நல அலுவலகத்தில் நாளை மாலைக்குள் விண்ணப்பிக்குமாறு ஆட்சித்தலைவர் டாக்டர் உமா கேட்டுக்கொண்டுள்ளார்.

சிவகங்கை மாவட்டத்தில் குழந்தை தொழிலாளர்களை பணியமர்த்தினால் சம்மந்தப்பட்ட கடை மற்றும் நிறுவன உரிமையாளர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஆட்சித்தலைவர் திருமதி. ஆஷா அஜித் எச்சரித்துள்ளார்.

திருச்சி மாவட்டத்தில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் இலவச வீட்டுமனை பட்டா சிறப்பு முகாம் நாளைமுதல் மூன்று நாட்களுக்கு அனைத்து கிராம நிர்வாக அலுவலகங்களிலும் நடைபெற இருப்பதாக ஆட்சித்தலைவர் திரு.மா.பிரதீப்குமார் தெரிவித்துள்ளார்.

மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் இன்று நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மனுக்களை பெற்றுக்கொண்ட ஆட்சித்தலைவர் திருமதி சங்கீதா மாற்றுத் திறனாளிகளுக்கு கண்ணாடி மற்றும் ஊன்றுகோல்களை வழங்கினார்.

கன்னியாகுமரி மாவட்டம் ராஜாக்காமங்கலம், மேலசங்கரன்குழி ஊராட்சிகளில் நடைபெற்றுவரும் வளர்ச்சி திட்ட பணிகளை, ஆட்சித்தலைவர் திருமதி அழகுமீனா நேரில் ஆய்வு செய்தார்.

❖❖❖❖❖❖❖❖

வானிலை

வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி, விருதுநகர், தேனி, திண்டுக்கல், நீலகிரி, கோவை திருப்பூர்

மாவட்டங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், வேலூர், ராணிப்பேட்டை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்களில் அடுத்த சிலமணி நேரங்களில் மிதமான மழைக்கு வாய்ப்பிருப்பதாகவும் இம்மையம் கூறியுள்ளது.

வடதமிழக கடலோர பகுதிகள், தெற்கு வங்க கடலின் வடக்கு மத்திய மேற்கு, தென் மேற்கு பகுதிகளில் பலத்த சூறாவளி காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் இப்பகுதிகளுக்கு அடுத்த 5 தினங்களுக்கு செல்லவேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

❖❖❖❖❖❖❖❖

மண் சரிவு

மேற்கு தொடர்ச்சி மலைபகுதிகளில் பெய்த கனமழையால் தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் அகமலை ஊராட்சிகளுக்கு உட்பட்ட பகுதிகளுக்கு செல்லும் சாலையில் மண் சரிவு ஏற்பட்டுள்ளதால் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖

மேட்டூர்

காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் பெய்துவரும் கனமழை காரணமாக மேட்டூர் அணைக்கு நீர்வரத்து இன்று வினாடிக்கு 11 ஆயிரத்து 526 கனஅடியாக அதிகரித்துள்ளது.

டெல்டா பாசனத்திற்கு 12 ஆயிரம் கனஅடியும்,

கால்வாய் பாசனத்திற்கு 600 கனஅடி தண்ணீரும் திறக்கப்படுகிறது

ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து 14 ஆயிரம் கனஅடியாக காணப்பட்டது.

❖❖❖❖❖❖❖❖

ஹாக்கி

14-வது தேசிய சீனியர் ஆடவர் ஹாக்கி சாம்பியன் பட்ட போட்டிகள் சென்னையில் இன்று தொடங்குகின்றன.

வரும் 16-ம் தேதிவரை நடைபெறும் இப்போட்டிகளில் 31 அணிகள் பங்கேற்கின்றன.

தொடக்க ஆட்டங்களில் இன்று உத்தரபிரதேசம் - கேரளத்தையும் கர்நாடகா - உத்ரகாண்டையும் எதிர்கொள்கின்றன.

❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖